**அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2021**

அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஐயூடீபீ) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 01 ஆந் திகதிய சீஎல்கே100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவு மற்றும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.4 ஆம் திருத்தப்பட்ட பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவுமுள்ளது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பகுதிகளுக்கு இடையே தளத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தினை பாதுகாக்கும் நோக்குடன் இணைந்த அபிவிருத்தியின் சமச்சீர் வளர்ச்சி முறையொன்றினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52.00 மில்லியன் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன், 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனிலும்,திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியானது 2023 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையில் 02 ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா. மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் பொது திறைச்சேரிக்கு நேரடியாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பணத்தொகை ரூபா 4.94 மில்லியனினால் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், கடன் மீதியானது ரூபா 2.58 மில்லியனினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2.58 | செயற்திட்டம் ஏஎப்டீ, டொலர் கணக்குகள் மற்றும் செயற்திட்டத்தின் நடைமுறை கணக்கு தரவுகளுடன் கணக்குகளை தயாரிக்கின்றதுடன் ஈஆர்டீ உடன் ஒப்பிடாது. | சீர் செய்யப்பட்ட பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இரு ஒப்பந்தக்காரர்களுக்கு நேரடியாக பெற்றுக் கொடுத்த பணத்தின் பெறுமதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2.35 | செயற்திட்டத்தின் கொடுப்பனவு வவுசர்கள் ரூபாவின் மதிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் நேரடி கொடுப்பனவு அடிப்படையில் பிற்பட்ட பரிமாற்ற சீராக்கல்கள் எங்கள் கணக்கு புத்தகங்களில் மேற்கொள்ளப்படமாட்டாது. | சீர் செய்யப்பட்ட பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 7.9.2 ஆம் பந்தி மற்றும் 7.9.11 ஆம் பந்தி | அநுராதபுர பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 920.44 மில்லியனாக காணப்பட்டதுடன நிர்மாணிப்பிற்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 1,176.12 மில்லியனாக காணப்பட்டதுடன் ஒப்பந்தக்காரர் வழங்கிய தொகை பொறியியலாளரின் மதிப்பீட்டினை பார்க்கிலும் 30.2 சதவீதம் அதிகமாக காணப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் பீஓகியூ (BOQ) | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. டிடிஎஸ் இனால் 2020 இல் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம், மதிப்பீட்டினை திருத்துமாறு எம்பீசீ கோரியது. அதன் பிரகாரம், மதிப்பீடு திருத்தப்பட்டதுடன் பெறுமதி ரூபா 1,110.51 மில்லினாகும். பின்னர் தொகை 6.2% மட்டுமே மாறியது. | பெறுகை வழிக்காட்டிகள் செயற்திட்டத்தினால் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுப்படிகளின் தத்தமது சலுகை விகிதங்கள் இரண்டினதும் விகித பகுப்பாய்வு செய்யப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் விகிதங்களின் விலகல் 1-93 சதவீதம் குறைவாகவும், 1-4483 சதவீதம் அதிகமாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2006 இன் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.4.4 ஆம் பந்தி | மதியுரை பணியின் ஒப்பந்தக் காலம் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்தது. மதியுரை வழங்குதல்கள் (விவர வடிவமைப்புக்கள்) பீஎம்யூ க்கு 2022 மார்ச் 31 அன்று சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறெனினும், மதியுரை ஒப்பந்தக்காரருக்கு இறுதி கொடுப்பனவு இன்னுமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2022 மார்ச் 31 முடிவுத் திகதியில் எஞ்சிய திரட்டல் முற்பணமான ரூபா 18 மில்லியன் அறவிடப்படவில்லையென அல்லது திரட்டப்பட்ட முற்பண பத்திர உத்தரவாதக் காலத்தை நீட்டிக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பணம் செலுத்தல் இறுதி கட்டத்தில் இருப்பதனால், சான்றளிக்கும் கட்டணச் சான்றிதழின் முழுத்தொகையும் அறவிடப்படும். | பெறுகை வழிக்காட்டிகள் செயற்திட்டத்தினால் பின்பற்றப்படல் வேண்டும். |

**3. பௌதீகச் செயலாற்றல்**

**3.1 செயற்திட்டததின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| | கூறு/ உப கூறு | நடவடிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | | |
| | | | சதவீதம் | சதவீதம் | | | |
| (அ) | நிலைப்பேறான நகர உட்கட்டமைப்பு | நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 100% | இல்லை | கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியான 12 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் பூர்த்தி செய்வதற்கு தேவைப்பட்டது. எவ்வாறெனினும், மதியுரை பணியின் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விரிவான பொறியியல் திட்டம் தாமதித்தமையின் காரணத்தினால் ரூபா 5,925.19 பெறுமதியான 08 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டிருக்-கவில்லை. எனவே, கடன் வசதி 2023 செப்தெம்பர் 30 வரை நீட்டிப்பதற்கு நேர்ந்தது. | | அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பொது இடத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டம் | | | | ரயில்வே ப்லாசா நிர்மாணிப்பு மற்றும் லயன் பில்லர் ரவுன்டபோட் மீள் அபிவிருத்தி 2020 யூலை 06 ஆம் திகதி ரூபா 122.62 மில்லியனிற்கு ஒப்பந்தக்காரருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அது 2021 யூலை 21 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2022 மார்ச் 14 ஆம் திகதி வரையில் 03 தடவைகள் நீட்டிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டு இறுதி வரை ஏற்கப்பட்ட மொத்த செலவினம் ரூபா 23.79 மில்லியனாக காணப்பட்டதுடன் அத் திகதியில் 10 சதவீத மெதுவான செயன் முன்னேற்றத்தினை கொண்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற நிலைமையினால். | தாமதம் மற்றும் கிரய சேமிப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்கு உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (i) | ரயில்வே ப்லாசாவின் நிர்மாணிப்பு | சிவில் பணிகள் | 90% | 80% | | | |
| (ii) | வசதியான மையத்தின் நிர்மாணிப்பு | | 90% | 80% | | | |
| (iii) | அன்னதான கூட கட்டிடத்தின் சீரமைப்பு | | 90% | 80% | | | |
| (இ) | லயன் பில்லர் ரவுன்டபோடின் நிரமாணிப்பு | | 86% | 65% | பிரமாண அளவை குறிப்பு மற்றும் பொறியியல் வரைப்படங்களுக்கு இடையிலான பொருத்தமின்மை காரணத்தினாலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் முறையான ஒருங்கிணைப்பு இன்றி திட்டங்கள் தாயரிக்கப்பட்டமையினாலும் ஆரம்ப திட்டங்களை மாற்றியமைக்க | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது . | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | வேண்டியிருந்தது. இது தாமதத்திற்கு வழிவகுத்தது. | | உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | (i) ஸ்ரீ மஹா போதி கிழக்கு வாயிலின் வாகனத் தரிப்பிட நிர்மாணிப்பு | 90% | 75% | ஸ்ரீ மஹா போதியின் கிழக்கு வாயில் வாகனத் தரிப்பீடத்தினை மீள் அபிவிருத்தி செய்தல் மற்றும் விளக்க பலகை பொருத்துதல் 2020 செப்தெம்பர் 10 ஆம் திகதி ரூபா 213.63 மில்லியன் ஆன மொத்த ஒப்பந்த தொகைக்கு வழங்கப்பட்டதுடன் அது 2021 நவம்பர் 30 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும், செயற்திட்டத்தினால் மூன்று கால நீட்டிப்புக்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டு இறுதி வரையில் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் ரூபா 69.49 மில்லியன் ஆனதுடன் அத் திகதியில் 15 சதவீதமான மந்தமான செயன்முன்னேற்றத்தினை கொண்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற நிலைமையினால். | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | (i) புனித நகரத்தில் விளக்க பெயர் பலகைகளை பொருத்தல். | 89% | 65% | பீஓகியூ (BOQ) இன் 3.1.1 மற்றும் 3.1.2 உறுபடியின் கீழ் வாகனத் தரிப்பிடத்தின் சுற்றிலும் 132 விளக்க பலகைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 9.65 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், உரிய திகதியொன்று குறிப்பிடப்படாது அவ் விளக்க பலகைகளுக்காக மென் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பிரதிகளில் விபரங்கள் எழுதுவதற்கு மதியுரையாளரொருவருக்கு ரூபா 369,600 ஆன தொகை 2021 பெப்ரவரி 17 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. எவ்வாறெனினும், மேற்படி காரணத்தினால் 2022 ஒக்தோபர் 13 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | (i) சுரபுர திறந்தவெளி திரையரங்கத்-தினை புதுப்பித்தல் | 56% | 38% | சுரபுர திறந்தவெளி திரையறங்கு, எஸ்எல்பீசீ (SLBC) திறந்தவெளி திரையறங்கு மற்றும் தர்மபால மாவத்தையின் நில அலங்கரித்தலுக்காக ரூபா 348.60 மில்லியனான ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கொவிட் 19 தொற்றின் காரணமாக செயற்திட்ட தளம் 21 நாட்கள் மூடப்பட்டிருந்தது. வேலைத் திட்டத்தின் பிரகாரம், நிர்மாணிப்பு பணிகளின் செயலாற்றர் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறெனினும், ஒப்பந்தக்காரரினால் திருத்தப்பட்ட வேலைத்திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்-கவில்லை. எவ்வாறெனினும், மீளாய்வாண்டு இறுதி வரையில் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் ரூபா 83.2 மில்லியனாக காணப்பட்டதுடன் அத் திகதியில் 20 சதவீத மந்தமான செயன் முன்னேற்றத்தினை கொண்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற நிலைமையினால். | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| | (ii) எஸ்எல் பீசீ திறந்த-வெளி திரையரங்கத்தினை புதுப்பித்தல். | 56% | 38% | | | |
| | (iii) தர்மபால மாவத்தையின் நில அலங்கரிப்பு | 40% | 32% | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ) | (i) ஸ்ரீ மஹா போதி நுழைவு வாகனத் தரிப்பிடம்<br><br>(ii) மிரிசவெடிய வாகனத் தரிப்பிடம்<br><br>(iii) லஹ்காராமய வாகனத் தரிப்பிடம் | 54%<br><br>40%<br><br>37% | 12%<br><br>14%<br><br>10% | இம் மூன்று இடங்களிலும் வாகனத் தரிப்பிடங்கள் மீள் அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 262.34 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பெற்றுக் கொடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் பிரகாரம், இந்த செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகின் நெருங்கிய மேற்பார்வை காணப்படாமையினால் இந்த ஒப்பந்தத்தின் செயன் முன்னேற்றம் பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற நிலைமையினால். | செயற்திட்ட செயல்பாடுகளை திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டம் விரிவான வடிவமைப்பு ஆய்வு மதியுரை சேவை பெறுகைக்காக ரூபா 212.66 மில்லியனிற்கு (1.18 யூரோ) 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி SCE, Group hit – Green Tech Consultants கூட்டு வியாபாரத்துடன் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம், மதியுரையாளருக்கு 2019 மே 12 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்ட மதியுரை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், குறித்த திகதி நான்கு தடவைகள் திருத்தப்பட்டுள்ளது.மேலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் 18 சமர்ப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 17 சமர்ப்பித்தல்கள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒப்பந்தத்தின் 46.2 இன் பிரகாரம், உரிய காலத்தில் அறிக்கையொன்று சமர்ப்பிக்காமையின் காரணத்தினால், ரூபா 59 மில்லியனான கலைத்தல் சேதமானது நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் , அத் தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டங்களின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயற்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஏப்ரல் மாதத்தில், கழிவு நீர் முகாமைத்துவ கூறுக்காக சாத்தியவள ஆய்வொன்றாக 04 சமர்ப்பித்தல்கள் முன்வைப்பதற்கு ஆரம்ப மதியுரை நிறுவனத்திற்கு மேலதிகமாக மதியுரை பணியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த மேலதிக பணியின் காரணத்தினால் ஒப்பந்தத்தின் பெறுமதி 106,080 யூரோ வரையில் அதிகரித்துள்ளதுடன் ரூபா 89.63 மில்லியன் + PS 50 மில்லியனாக மொத்தம் ரூபா 139.63 மில்லியன் ஆக காணப்பட்டது.<br>அதன் பிரகாரம், மதியுரையாளரினால் அநுராதபுர நகரத்தில் கழிவு நீர் முகாமைத்துவ அமைப்பிற்கான இறுதி சாத்தியவள அறிக்கை 2020 யூலை 24 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவம் சான்றுறுதியளித்தல் வேண்டும். |
| (இ) | அநுராதபுர ரயில்வே ப்லாசா மற்றும் லயன் பில்லர் ரவுன்டபோட் மீள்அபிவிருத்திக்காக ரூபா 122 மில்லியன் பெறுமதியான பிரமாண அளவைக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, 2022 மே மாதம் இறுதியில் மேலதிக வேலைகளாக ரூபா 7.5 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளதுடன் அது பிரமாண அளவைக் குறிப்பு பெறுமதியின் 6.18 சதவீதமாகும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைவதற்கான உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஸ்ரீ மஹா போதி கிழக்கு நுழைவாயில் வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக காணியின் உரித்து விடுவிக்கப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. பிரதான தேரர் மற்றும் ஏஎம்சீ உடன் கலந்துரையாடப்படும். | அரச விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (உ) | தர்மபால மாவத்தை அபிவிருத்திக்காக மற்றும் நில அலங்கரித்தல் பணிகளுக்காக போடப்பட்ட இன்டர்லொக்களை அகற்றுவதற்காக ரூபா 24.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பு நடவடிக்கைளின் போது நல்ல நிலைமையிலுள்ள டயில் மீண்டும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு ரூபா 1.7 மில்லியனாக விலைகள் திருத்தப்பட்டன. எவ்வாறெனினும், கலற்றி மீண்டும் பயன்படுத்தக்கூடிய இன்டர்லொக்களின் தரத்தினை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பீயூஐ மற்றும் ஆர்டீஏ பதவியணியினால் பரிசோதிக்கப்படுகின்றது. | மதியுரை சேவைகள் ஒப்பந்தத்தின் இவ்வாறான நிலையற்ற சிக்கல்களை குறைத்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | செயற்திட்டத்தின் ஊடாக அளிக்கப்பட்ட 04 நிர்மாணிப்பு தொகுப்புகள் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு அளிக்கப்பட்டிருந்தது, பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் 10 தொடக்கம் 7 சதவீதத்திற்கு இடைப்பட்ட குறிப்பிடத்தக்க மாறுபாட்டுடனாகும். எவ்வாறெனினும், உறுப்படிகளுக்கான விகித பகுப்பாய்வு மற்றும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பெறுகை வழிக்காட்டி கோவையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், தயாரிக்கப்பட்ட பிரமாண அளவை குறிப்பின் பெறுமதி யாதார்த்தமானதாக இல்லையென அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | பெறுகை வழிக்காட்டி கோவையை பின்பற்றப்பட வேண்டியதுடன் கிரய மதிப்பீட்டுடன் வடிவமைப்பினை மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (எ) | ரூபா 877 மில்லியன் பெறுமதியான சந்தைக் கட்டிடம் மற்றும் பல் மாடி வாகன தரிப்பிட ஒப்பந்தத்தின் நிர்மாணிப்பு அநுராதபுர நகரத்தின் வேளைப்பளு காரணமாக நிறுத்தப்பட்டதுடன் நிர்மாணத்தின் போது பாரபட்சம் காட்டிய தரப்பினருக்கு இழப்பீடு வழங்க வேண்டியிருந்தது. இதன் பிரகாரம், செயற்திட்டம் முறையான சாத்தியவள ஆய்வொன்று இன்றி செயற்பாடுகளை இனங்காண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நிதி செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். செயற்திட்ட செயற்பாடுகளினால் நேரக்கூடிய தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு தீர்வு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |